1994 ஏப்ரல் 5] [திரு. இ. மதுசூதனன்]

கிடைத்த போதிலும், நூல் விலை, உற்பத்தி பொருளின் விலைக்கு மாறாக அமைந்த காரணத்தால் உற்பத்தியாளர்கள் இதனால் ஏற்படும் இழப்பினை தவிர்க்கவும், தங்களது எதிர்ப்பினை சாத்வீகமாக அரசுக்கு தெரிவிக்கவும் வேலை நிறுத்தத்தினை மேற்கொண்டனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் பகுதி தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் 16-3-1994 காலை 10.00 மணியளவில் கரூர் தலைமை தபால் அலுவலகம் முன்பு நூல் விலை உயர்வினை எதிர்த்து மறியல் போராட்டம் நடத்தினர். மேலும் 16-3-1994 முதல் 20-3-1994 முடிய கடையடைப்பும் செய்தனர். இக்கடையடைப்பின்போது, தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் எவரும் நூல் வாங்கவில்லை. தீர்ந்த சரக்குகள் அனுப்பவில்லை. மற்றும் இது தொடர்பாக எவ்வித வியாபாரமும் செய்யவில்லை. ஒரு சில உற்பத்தியாளர்கள் வியாபாரம் செய்ய முயன்றபோது தடுக்கப்பட்டு அவர்களின் கடைகளும் அடைக்கப்பட்டன. 21-3-1994 முதல் தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்தியினை மீண்டும் வழக்கம்போல் செய்து வருகின்றனர். எனவே தனியார் நெசவாளர்களின் 16-3-1994 முதல் 20-3-1994 முடிய 5 நாட்கள் உற்பத்தி பாதிக்கப்பட்டது. இப்போராட்டத்தினால் சமூக பாதுகாப்பிற்கு எவ்வித அசம்பாவிதமும் ஏற்படவில்லை. தற்போது நிலைமை சீரடைந்து நெசவாளர்கள் வழக்கம்போல் தங்களது தொழிலினை செய்து வருகின்றனர்.

கூட்டுறவுத்துறையின் கீழுள்ள நெசவாளர்களுக்கு எவ்வித தொழில் இழப்பும் ஏற்படவில்லை.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மணிமேகலை, நீங்கள் இதில் கேள்வி கேட்க முடியாது. அமைச்சர் அவைக்குத் தகவலை வைத்துவிட்டார்கள் அவ்வளவுதான்.

(ஆ) சிதம்பரம், அரசினர் நந்தனார் மாணவர் விடுதியில் ஒரு மாணவர் இறந்ததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் என்.ஆர். ராஜேந்திரன், செ. ஆறுமுகம், செ.கு. தமிழரசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார். திரு. என்.ஆர். ராஜேந்திரன்.

[1994 ஏப்ரல் 5

திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம், அரசினர் நந்தனார் மாணவர் விடுதியில் மர்மமான முறையில் மாணவர் ஒருவர் இறந்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், காட்டுவண்ணாங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கசாமி என்பவரின் மகன் தட்சிணாமூர்த்தி, தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர் நலத்துறை அரசினர் நந்தனார் பள்ளி மாணவர்கள் விடுதியில் தங்கி, அரசினர் நந்தனார் ஆண்கள் மேனிலைப் பள்ளியில் 9-ம் வகுப்பு .படித்து வந்தான். 30-3-1994 அன்று காலை 11-30 மணி அளவில் அரசினர் நந்தனார் பள்ளி மாணவர் விடுதி காப்பாளரின் ஓய்வு அறையில் உள்ள மின் விசிறி கொக்கியில் தட்சிணாமூர்த்தி பிணமாக தொங்கிக் கொண்டிருப்பதை கண்டுள்ளார்கள். அன்று காலை திருடியதாக கூறப்பட்ட புகாரின் மீது மாணவர் தட்சிணாமூர்த்தியிடம் விசாரணை செய்ததாக தெரிய வருகின்றது. ஆனால் இந்த அசம்பாவிதம் பற்றிய தகவலை விடுதியின் தலைமை காப்பாளர் திரு பி. ஹரிதாஸ் என்பவர் மாலை 3.00 மணி அளவில்தான் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

தகவல் கிடைக்கப்பெற்றதும், சிதம்பரம் கோட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரும் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தியுள்ளனர். அவர்கள் நடத்திய முதல் விசாரணையில் அந்த மாணவரின் மரணம் சந்தேகப்படும்படியாக உள்ளது தெரியவந்தது. மேலும் விடுதியின் தலைமை காப்பாளர் மற்றும் துணை காப்பாளர்கள் சம்பவ இடத்தில் சில தடயங்களை அழித்திருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதும் தெரியவந்துள்ளது.

சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் இந்தச் சம்பவம் குறித்து குற்ற எண்.139/94ன் கீழ் சந்தேக மரணம் என்ற பிரிவில் முதலில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. சிதம்பரம் கோட்ட ஆட்சித் தலைவரும் காவல்துறையினரும் மேற்கொண்ட முதல் விசாரணைக்குப் பின்னர் இந்த வழக்கு இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 302-கொலைக் குற்றம்,

1994 ஏப்ரல் 5] [திரு. எம். ஆனந்தன்]

பிரிவு 342–தவறான முறையில் ஒரு தனி நபரை சிறை வைத்தல் மற்றும் பிரிவு 201–தடயங்களை அழித்தல் போன்ற குற்றங்களுக்கான பிரிவுகளின் கீழ் மாற்றப்பட்டது.

தலைமைக் காப்பாளர் திரு. பி. ஹரிதாஸ், துணைக் காப்பாளர் முத்துவேல், ரவிச்சந்திரன், பாலசுந்தரம், ஜெயராம், வாசுதேவன் மற்றும் துப்புரவாளர் கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஏழு பேர் மீதும் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வாசுதேவன் மற்றும் கிருஷ்ணமூர்த்தியைத் தவிர்த்து இதர 5 பேரும் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்த 7 பேரும் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பொது மக்கள் மத்தியில் எந்தத் தப்பான எண்ணமும் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தின் அடிப்படையில் 4 மருத்துவர்களைக் கொண்ட ஒரு மருத்துவர் குழு சிதம்பரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரியின் முன்னிலையில் 31–3–1994 அன்று பிரேதப் பரிசோதனையை மேற்கொண்டது. முக்கிய அரசு அலுவலர்களும் அந்த நேரத்தில் மருத்துவமனையில் இருந்துள்ளார்கள். மாணவர் தட்சிணாமூர்த்தியின் உடல் அவரது பெற்றோர்களிடம் அன்றே ஒப்படைக்கப்பட்டது.

அரசினர் நந்தனார் ஆண்கள் மேனிலைப் பள்ளியில் ப்ளஸ்–2 மாணவர்களுக்கான பொது தேர்வு 31–3–1994 அன்று திட்டமிட்டபடி நடைபெற்றது. ஆனால் மாவட்ட அளவில் 6–ம் வகுப்பு முதல் 9–ஆம் வகுப்பு வரை மற்றும் ப்ளஸ்–1 பொதுத் தேர்வு அந்தப் பள்ளியில் நடைபெறவில்லை.

மாவட்ட ஆட்சியாளர் நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகிறார். இந்நிகழ்வு பற்றி காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். தவறு யார் மீது கண்டறியப்பட்டாலும் அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 11–55

திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். குற்றம் செய்தோர் மீது இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு மேற்கொண்டுள்ள துரித நடவடிக்கைக்கு நன்றி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களும் நானும் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரிடையாகச் சென்று பார்வையிட்டோம். இந்தச்

சம்பவத்தின் பின்னணியில் சில சமூக விரோதிகளும் உள்ளனர் என்பது தெரிய வருகிறது. அவர்கள் மீதும் நடவடிக்கையெடுக்கப்படுமா? இறந்த மாணவர் குடும்பத்திற்கு ஆறுதல் அளித்து, பாதுகாப்பு அவசியம் கருதி, என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட அந்த விடுதிக்கு சுற்றுச் சுவர் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் கோரியது பற்றி காவல் துறை துரிதமாக நடவடிக்கையெடுத்து புலன் விசாரணை செய்து வருகிறது. அதனுள் நான் போகவில்லை. அந்த மாணவர் விடுதிக்கு காம்பவுண்ட் சுவர் கேட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. ஆறுமுகம்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *30-3-1994* அன்று காலை *11.30* மணியளவில் சிதம்பரம் நந்தனார் ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் மாணவர் ஒருவர் இறந்ததாக விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மாலை *3.00* மணியளவில் அந்த மாணவருடைய இறப்புக்கு அந்த விடுதியினுடைய காப்பாளர் புகார் செய்ததாக இந்த விவர அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. *11.30* மணிக்கு இறந்த அந்த மாணவனை குறித்து மாலை *3.00* மணியளவில் புகார் செய்யப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட விடுதிக் காப்பாளர்கள் இருந்தும்கூட பொறுப்பற்ற முறையில் அந்த மாணவர் இறப்பினை உடனே புகார் செய்யப்படாமல் இருந்ததற்கு காரணம் புதிராக இருப்பதோடு மட்டுமல்லாமல் இந்த மாணவருடைய இறப்பிலே முக்கியக் குற்றவாளியாகக் கருதப்படுகிற மூன்று நபர்கள் ஒரு முக்கிய பிரதான கட்சியை சேர்ந்தவருடைய பாதுகாப்பிலே இருப்பதாகத் தெரிய வருகிறது. உடனடியாக அந்த மூன்று முக்கிய குற்றவாளிகளை கைது செய்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு பாதுகாப்பு அளிக்கிற அந்த முக்கிய பிரதான கட்சியைச் சேர்ந்த பிரமுகரும் கைது செய்யப்படுவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் துரித ஆணையின்படி குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஒருவர் மட்டும் தான்–கிருஷ்ணமூர்த்தி என்கிற குற்றவாளியை மட்டும்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அவரும் மிக விரைவில் கைது செய்யப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. கு. தமிழரசன்.

திரு. செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஆதிதிராவிடர் மாணவர் விடுதி சிதம்பரத்தில் உள்ள நந்தனார் விடுதிதான். இந்த அவையிலே 30 ஆண்டுகாலத்திற்கு மேலாக உறுப்பினராக இருந்த எங்கள் சமுதாயப் பெருந்தலைவர் சுவாமி சகஜானந்தா அவர்களுடைய அரிய முயற்சியோடு அந்த விடுதி அங்கே தோற்றுவிக்கப்பட்டு, ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆதிதிராவிட மாணவர்கள் அதிலே பயின்று வருகிறார்கள். அதிலே இப்படிப்பட்ட ஒரு துரதிர்ஷ்டவசமான கொலை நிகழ்ந்திருப்பது தமிழக மாணவர்களிடையே ஒரு பதட்டத்தை உருவாக்கி இருக்கிறது. எனவே, இதைப் போக்குகிற வகையில் வருங்காலத்தில் இப்படிப்பட்ட துயரச் சம்பவங்கள் நடைபெறாத வகையில் பாதுகாப்பதற்கு இனி விடுதிக் காப்பாளர்களை நியமிக்கிறபோது அவர்கள் மூன்று ஆண்டுகாலம் மட்டும் விடுதிக் காப்பாளராகச் செயல்படலாம் என்ற ஒரு நடைமுறையை ஆதிதிராவிடர் நலத்துறை செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு ஆதிதிராவிடர் நலத்துறையில் உள்ள விடுதிகளை, பள்ளிகளை முறைப்படி ஆய்வதற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு போதிய வாய்ப்பு கிடைப்பதில்லை. அவர்களுக்கு நில ஆர்ஜிதம் மற்றும் நிர்வாகப் பணிகள் இருப்பதால் அவைகளை அவர் செய்ய முடியவில்லை. எனவே, ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மாவட்ட அளவில் தனி கல்வி ஆய்வாளர்களை அமைப்பதற்கு இந்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகாலம் மாணவர் விடுதி வார்டனாகப் பணிபுரிந்தவர்கள் மேலும் பணிபுரிய முடியாத அளவுக்கு இன்றைக்கு உத்தரவுகள் இருக்கின்றன. ஆகவே, அது முறைப்படி நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, கல்வித் துறையின் மூலம் அவை கண்காணிக்கப்படுமா என்று கேட்டார்கள். அதைப்பற்றி ஆய்வு மேற்கொள்ளலாம். (குறுக்கீடு) ஏ.ஈ.ஓக்கள் இருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின் மூலமாக கண்காணிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.